டாக்டர் அம்பேத்கர் நகர் பகுதியில் வசிக்கும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை நெடுங்கால ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கைகளான விளையாட்டு அரங்கம் மனமகிழ் மன்றம் மற்றும் நூலகம் ஆகியவற்றை இரட்டைமலை சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான நகராட்சிக்கு பள்ளியின் பின்புறத்தில் இடத்தில் அமைக்க கோருதல்.

லட்சுமி நகர் , கன்னியம்மாள் நகர் (ம) ரங்கசாமி நகர் ஆகிய தெருக்களில் மின்கம்பங்கள் அமைத்து மின்சார பல்பு பொருத்துதல் . மின்கம்பங்கள் பொருத்தப்பட்டு இதுவரை மின்சார பல்ப் இல்லாத மின் கம்பங்களுக்கு மின்சார பல்பு அமைத்தல். மேற்படி தெருக்களுக்கு பெயர் பலகை மற்றும் இத்தெருக்களில் அமைந்துள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கதவு எண் எழுத வழிகளையும் மேற்கொள்ளுதல்.

கற்பகம் கடை எண்.5 நியாய விலை கடையில் பொதுமக்கள் நிழற்குடை அமைத்தல் கற்பகம் கடை எண் 5 கடை அமைந்துள்ள மைதானத்தில் மேற்படியான பகுதிவாழ் இளைஞர்களுக்கான உள் விளையாட்டு அரங்கம் , உடற்பயிற்சிக்கூடம் உடற்பயிற்சி சாதனங்கள் மற்றும் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் . மோசூர் ரோட்டில் அந்தோணியார் கோயில் துவக்கம் முதல் பழைய டாக்டர் அம்பேத்கர் மன்றம் வரையில் அமைந்துள்ள கழிவு நீர் கால்வாய் புதுப்பித்தல். சங்கம் தெருவில் புதிய சிமெண்ட் சாலை (ம) கல்வெட்டு அமைத்தல்.

மோசூர் ரோட்டில் அமைந்துள்ள இடுகாட்டிற்கு சுற்று சுவர் (ம) கைப்பம்பு அகற்றி சிண்டெக்ஸ் டேங்க் அமைத்தல். சங்கம் தெருவின் கடைசியில் பொருத்தப்பட்டுள்ள மின்கம்பத்தை (உருண்டை இரும்பு ) புதிய சிமெண்ட் கம்பம் ஆக மாற்றி தருதல். M C ராஜா தெருவில் உள்ள வீட்டின் மிக அருகில் அமைந்துள்ள மின் கம்பத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்தல்.

மரகத நகர் பகுதிக்கு உட்பட்ட 4 தெருக்களுக்கும் பாதாள சாக்கடை புதிய கழிவு நீர் கால்வய் புதிய குடிநீர் இணைப்பு , புதிய தெரு மின் கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைத்தல் புதிய கழிப்பிடம், ஆழ்துளை கிணறு (ம) சிண்டெக்ஸ் டேங்க் தொட்டி அமைத்தல். அத்திப்பட்டான் தெரு, M C ராஜா தெருக்களுக்கு புதிய சிமெண்ட் சாலை அமைத்தல்

இரட்டைமலை சீனிவாசன் தெரு , சபாநாயகர் சிவசண்முகம் தெரு , அத்திப்பட்டான் தெரு பன்னீர்செல்வம் தெரு மற்றும் M C ராஜா தெரு ஆகிய பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த கழிவு நீர் கால்வய்களை புதுப்பித்தல். அரக்கோணம் ஏரியிலிருந்து (9–வது வார்டுக்குட்பட்ட பகுதி) கடை வாசலுக்கு மழைக்காலங்களில் வீட்டிற்குள் தண்ணீர் புகுவதை தடுத்து தண்ணீரை மாற்று வழியில் செல்ல புதிய வடிகால் அமைத்தல்.

**பொருள் எண்.23**

**<u>11–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.க.ரேவதி கன்னியப்பன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

ராஜாபாதர் தெருவில் உள்ள போர் நீண்டகாலமாக அடைந்து பழுது உள்ளது. அதை சரி செய்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ராஜாபாதர் தெருவில் உள்ள (கடைசியில்) போரில் இருந்து சிண்டக்ஸ் தண்ணீர் தொட்டியை வைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள பிள்ளையார் கோயில் அருகில் ஐயிமாஸ் மின்விளக்கு உள்ளது. அதில் ஒரு மின்விளக்குகள் கூட எரிவதில்லை. அதை சரி செய்து தருமாறு அன்புடன் கேட்டும்கொள்கிறேன்.

ராஜாபாதர் தெருவில் உள்ள உப்புக்குளத்தில் உள்ள அனைத்து மின்விளக்குகள் எரிவதில்லை . அதை சரி செய்து தருமாறு அன்புடன் கேட்டும்கொள்கிறேன்.

பழையபஜார் தெருவில் உள்ள ஸ்ரீ பெரியபாலையத்தம்மன் கோயில் அருகில் தண்ணீர் போர் போட்டு சிண்டக்ஸ் தொட்டி வைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரைபிள்ளை தெருவில் தண்ணீர் போர் போட்டு சிண்டக்ஸ் தொட்டி வைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது வார்டில் உள்ள போலாட்சியம்மன் கோயில் தெருவில் தண்ணீர் போர் போட்டு சிண்டக்ஸ் தொட்டி வைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது வார்டில் உள்ள போலாட்சியம்மன் கோயில் தெருவில் உள்ள போலாட்சியம்மன் நடுநிலை பள்ளி அருகில் ஐமாலஸ் மின்விளக்கு அமைத்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.24**

**<u>12-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.ரஷிதா கரிமுல்லா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

மணியகாரத் தெருவில் உள்ள 12 வது வார்டின் உப்புக்குளம் அருகில் உள்ள மினிபவர் பம்பு குடிநீர் தொட்டி மசூதி சந்த தெருவுக்குள் மக்கள் செல்லும் பாதையில் அமைந்துள்ளது அவசரத்திற்கு வாகனங்கள் மற்றும் அமரர் ஊர்த்தி செல்ல இடையுறாக உள்ளது. ஆகையால் அந்த தண்ணீர் தொட்டியை பக்கத்தில் உள்ள உப்புக்குளம் காம்பவுண்ட் ஓரமாக மாற்றி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன் .

மசூதி சந்து தெருவில் உள்ள மினிபவர் பம்பு வேலை செய்யாத காரணத்தால் மக்கள் தண்ணீர் இன்றி மிகவும் அவதிக்கு உள்ளாகி உள்ளனர் மேலும் வரும் காலம் கோடை காலம் என்பதால் இந்த பணியை மக்களின் அவசரம் கருதி உடனடியாக சரிசெய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன் .

12 வது வார்டுக்கு உட்பட்ட மசூதி சந்து தெருவில் அமைந்துள்ள மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் முற்றிலும் சேதமடைந்து கால்வாய் கழிவுநீர் செல்லமால் தெருப் பகுதியில் தேங்கி மக்கள் கொசு தொல்லையாலும் துர்நாற்றத்தினாலும் மிகவும் அவதிக்குள்ளகின்றனார் ஆகையால் மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாயினை புதியதாக கட்டி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்

12 வது வார்டுக்கு உட்பட்ட மணியகாரத் தெருவில் அமைந்துள்ள முகாம்பிகை கோயில் அருகில் உள்ள மினிபவர் பம்பு வேலை செய்யாத காரணத்தால் மக்கள் தண்ணீர் இன்றி அவதிபடுகின்றனர் மேலும் வரும் காலம் கோடை காலம் என்பதால் மக்களின் இந்த பணியை அவசரம் கருதி உடனடியாக சரிசெய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன் .

மணியகாரத் தெருவில் உள்ள CSI பெண்கள் பள்ளியில் குழந்தைகள் குடிநீர் இன்றி மிகவும் அவதிபடுகின்றார்கள் ஆகையால் அங்கு ஒரு குழாய் இணைப்பு தருமாறு

மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் மற்றும் அங்கு கைபம்பு நீளம் உயர்த்தி அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12 வார்டுக்கு உட்பட்ட பஜார் தெருவில் உள்ள மார்கெட் பகுதியில் மழைநீர் கால்வாய் முற்றிலும் சேதமடைந்து கழிவுநீர் செல்ல வழியில்லமால் தெருவிற்கு மக்கள் செல்லும் பாதையில் இடையூறாக உள்ளது அங்குள்ள கடைகளின் ஆக்கிரமிப்பினால் கழிவு நீர் செல்ல முடியமால் துர்நாற்றம் வீசுகிறது இதனால் மக்கள் மிகவும் அவதிபடுகின்றனர் ஆகையால் இந்த கால்வாயினை புதியதாக கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் .

12 வது வார்டுக்கு உட்பட்ட திருமலை ஆச்சாரி நெருவில் உள்ள பாக்டர் கௌஸ் மருத்துவமனை எதிரில் பொது மக்கள் செல்லும் வழியில் குப்பைகளை பரமாரிப்பு இன்றி சிதறி கிடக்கின்றன. இதனால் அங்கு வசிக்கும் மக்களுக்கும் மருத்துவமனைக்கு வரும் நோயளிகளுக்கும் தீராத கொசு தொல்லை உள்ளது . அதலால் டெங்கு மற்றும் மலேரியா போன்ற நோய்கள் எதிர்காலங்களில் வரமால் தடுக்க குப்பைகளை ஓரிடத்தில் சோர்த்து எடுத்து செல்ல ஒரு குப்பைத் தொட்டியினை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12 வது வார்டுக்கு உட்பட்ட கிராம சாவடி தெருவில் மக்கள் அதிகம் கூடும் இடமாகிய நியாய விலை கடையின் எதிரில் பரமரிப்பு இன்றி குப்பைகளை கொட்டி வருகின்றனார் அந்த இடத்தில் குடிநீர் குழாய் உள்ளது அங்கு குப்பைகளை கொட்டுவதினால் குடிநீர் பயன்படின்றி மக்கள் மிகவும் அவதிக்கு உள்ளகியுள்ளனார் மற்றும் நியாயவிலை கடைக்கு வரும் மக்கள்  மிகவும் அவதிபடுகின்றனர் ஆகையால் இந்த இடத்தில் ஒரு குப்பை தொட்டியை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்

மாணியகாரத் தெருவில் முகாம்பிகை கோயில் பக்கத்தில் இரண்டு மின்கம்பங்கள் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பஜார் தெருவில் உள்ள ராஜ் தங்க மாளிகை கடையில் தேவையில்லாத குப்பைகள் உள்ளது இதனால் மின்கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது அதை அகற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

12 வது வார்டில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை என்னவென்றால் 1956 முதல் மசூதி தெருவில் நகராட்சி உருது தொடக்கப்பள்ளி ஒரு வாடகை கட்டிடத்தில் இயங்கி கொண்டு இருந்தது. காலப்போக்கில் கட்டிடத்தின் உரிமையாளர் கட்டிடம் வேண்டி நீதிமன்றம் சென்று கட்டிடம் காலி செய்யப்பட்டது. இதன் பிறகு அதிகாரிகள் மற்றும் ஆணையர் அவர்கள் இப்பள்ளியை அருகில் உள்ள போலாட்சி நடுநிலைப் பள்ளிக்கு இடமாற்றம் செய்தனர். சுமார் அறுபது (60) ஆண்டு காலம் முஸ்லிம் சமுதாய மக்கள் வசிக்கும் இடத்தில் இயங்கிக் கொண்டிருந்தது தற்போது முஸ்லிம் சமுதாயம் வசிக்கும் 12 மற்றும் 13 வது வார்டில் இப்பள்ளிக்கு ஒரு சொந்த கட்டிடம் ஒதுக்கித் தருமாறு அரக்கோணம் முஸ்லிம்கள் சமுதாய மக்கள் சார்பாக  நகர மன்ற தலைவர்  உறுப்பினர் ஆகிய திருமதி க.ரஷிதா கரிமுல்லா கேட்டுக்கொள்கிறோம்.

இராணிபேட்டை மாவட்டம் அரக்கோணம் நகராட்சியில் உள்ள எனது பகுதி 12 வது வார்டின் மசூதி சந்து தெரு மிக மோசமான நிலையில் உள்ளது அதை உடனடியாக பார்வையில் சாலை அமைத்து தருமாறு நகர மன்ற தலைவர் அவர்களை மிக தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

**பொருள் எண்.25**

**<u>13–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.G.M.கங்காதரன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

இரயில்வே போலிஸ் லைன் தெரு, வேதாசலால முதலி தெரு,மாணிக்கம் தெரு, ஆகிய தெருக்களில் முன்புறம் மற்றும் பின்புறம் கால்வாய்களை ஆழமாக தூர்வருவது வரும் மணல்களை உடனடியாக அகற்றி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மசூதி தெருவில் சாலைகளை உடனடியாக புதுப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வெள்ளைகுளம் தெருவில் உள்ள மின்இணைப்புடன் கூடிய நீர் தொட்டியை புதுப்பித்து மக்கள் பயன்பாட்டுக்கு சரிசெய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

என் வார்டுக்கு உட்பட்டு 9 மின் கம்பங்கள் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளதால் பொதுமக்களுக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏதாவது ஏற்படுவதற்க்கு முன்பு சரி செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பழைய பேரூந்து நிலையத்தில் பயனிகள் நிழற்குடை அமைத்து தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். மேற்கண்ட பணிகளை உடனடியாக செய்து கொடுக்கும்படி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

**பொருள் எண்.26**

**<u>14–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.அ.சாந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

நான் என்னுடைய 14வது வட்டத்தில் உள்ள குறைகளை தீர்மானமாக விவரித்துள்ளேன்.

டவுன் ஹால் 2–வது தெரு 7வது தெரு 1வது தெரு (ம) ஏட்டு குப்புசாமி தெரு ஆகிய தெருக்கள் பாதாளசாக்கடை திட்டத்தினால் மிகவும் மோசமான நிலையில் சாலை தெருக்கள் உள்ளது இதனால் முதியவர்கள் குழந்தைகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

ஏட்டு குப்புசாமி தெருமுனையில் மின்கம்பத்தில் தெருவிளக்கு அமைக்கப்பட வேண்டும்.

பிரகாஷ் (பழைய) தியேட்டர் அருகில் நான்கு தெருக்கள் ஒன்று கூடும் இடத்தில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்கப்பட வேண்டும்.

டவுன் ஹால் 2–வது தெருவில் உள்ள பிளாஸ்டிக் நீர்த்தேக்க தொட்டி உபயோகமில்லாமல் பழுதடைந்து உள்ளது அதை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்

மேலே கண்ட தெருக்கள் தெருக்களில் தேவைப்படும் இடத்தில் வேகத்தடை அமைக்க வேண்டும் மேலே கண்ட தீர்மானங்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.27**

**<u>15–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.D.நித்யா ஷியாம் குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

அரக்கோணம் நகராட்சி வார்டு –15ல் உள்ள கலைவானர் தெருவில் சாலை அமைத்து தர வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

வார்டில் உள்ள கை Pump களை அகற்றி Syntex tank அமைத்து தர கேட்டு கொள்கிறேன்.

வார்டில் உள்ள கலைவானர் சந்து தெருவில் மூன்று கல்வெட்டுகள் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கலைவானர் தெரு , பால் சொசைட்டி தெரு , திருவள்ளுவர் தெரு மற்றும் சுடுகாடு பின்புறம் அமைத்து உள்ள பெரிய கால்வாய் தூர்வாரி தரும்படி கேட்டு கொள்கிறேன்.

வார்டில் உள்ள பழுது அடைந்து மின் கம்பங்களை மற்றும் மின் விளக்குகளை அகற்றி மாற்றி அமைத்து தரும்படி கேட்டு கொள்கிறேன்.

சுடுகாட்டை சீரமைத்தல் மற்றும் மதில் சுவர் உயர்த்தி தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சுடுகாட்டில் உயர் மின் கோபுரம் அமைத்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ராஜாஜி தெருவில் வேக தடை அமைத்து மற்றும் பழுது அடைந்த மின் கம்பங்களை மாற்றி தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வார்டில் உள்ள அனைத்து தெருக்களில் மழைநீர் கால்வாய்களை சீர் அமைத்து தர வேண்டும்.

Haji bai Layout மற்றும் சுடுகாடு தெரு சாலை அமைத்து மற்றும் மின் விளக்கு மாற்றி அமைக்க கேட்டு கொள்கிறோம்.

15– வார்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பை துரிதமாக செய்து தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பொருள் எண்28**

**<u>17–வது நகரமன்ற உறுப்பினர் திரு.C.N.அன்பு அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எனது வார்டில் உள்ள கற்பக பிள்ளையார் கோவில் தெருவிற்க்கு சிமெண்ட் சாலை அமைத்து தர தீர்மானம் நிறைவேற்ற கோருகிறேன்.

எனது வார்டில் உள்ள கிழக்கு ஒப்பனக்காரதெருவிற்க்கு சிமெண்ட் சாலை அமைத்து தர தீர்மானம் நிறைவேற்ற கோருகிறேன்.

எனது வார்டில் உள்ள சாணாத்தியம்மன் கோவில் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைத்து தர தீர்மாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

எனது வார்டில் உள்ள 1)தாசில்தார் தெரு 2 மேற்கு ஒப்பண்ணக்கார தெரு. 3. கிழக்கு ஒப்பணக்கார தெரு. 4. சாணாத்தி அம்மன் கோயில் தெரு மற்றும் கற்பக பிள்ளையார் கோவில் தெரு மற்றும் குடிநீர் தொட்டி அருகேயும் CCTV Camara பொருத்தி தர தீர்மாணம் நிறைவேற்றகோரல் மக்களின் பொது நலனுக்காக அமைத்து தர கோருகிறேன்.

தாசில்தார் தெருவிற்கும் மேற்குஒப்பண்ணகாரதெருவிற்க்கும் தற்போது Sanction ஆகியுள்ள Paver Block Road ரத்து செய்து சாணாத்தியம்மன் கோவில் சந்து தெருவில் இருந்து மேற்கு ஒப்பணக்கார தெருவரை உள்ள சந்துக்களில் Paver Block Road அமைத்து தர தீர்மாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

தாசில்தார் தெரு மற்றும் மேற்கு ஒப்பண்ணக்கார தெரு சாலைகளில் உள்ள Patch work புதுப்பித்து தருமாறு தீமாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

பேரூந்து நிலையத்தின் பின்புறப்பகுதியில் உள்ள சாலைக்கு Patch work செய்து புதுப்பித்து தருமாறு தீர்மாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள குடிநீர்தேக்க தொட்டியை சுற்றியும் காம்பவுண்டு சுவர் அமைத்தும் நான்கு திசைகளிலும் நான்கு பொதுக்குழாய் இணைப்பு

அமைத்தும் 24 மணி நேரம் தண்ணீர் வரும்படி செய்து தர தீர்மாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

ஆஞ்சநேயர் கோவில் அருகில் டிரான்பார்மரை அகற்றி ரயில்வே சுவர் அருகாமையில் டிரான்ஸ்பார்மரை அமைத்து தரவும் தீர்மாணம் நிறைவேற்ற கோருகிறேன்.

பேருந்து நிலையத்தில் மேற்கு புறத்தில் ரயில்வே காம்பவுண்டு சுவர் ஒட்டியுள்ள கால்வாய் மீது 10x10 அடிக்கு கடைகள் கட்டி நகராட்சிக்கு வருவாயை பெருக்கினால் நகராட்சிக்கு ஏதுவாக இருக்கும் என தீர்மானம் நிறைவேற்ற கோருகிறேன்.

நெருஞ்சாலை துறை காந்திரோடு 4,5 இல் உள்ள மின்கம்பங்களை அகற்றி புதிய கம்பங்கள் அமைக்க பணம் மின்வாரியதுறைக்கு கட்டியுள்ளது இதுநாள் வரை மின்வாரியத்துறையும், நகராட்சி துறையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை மேற்படி செயல்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம் நிறைவேற்ற கோருகிறேன்.

**பொருள் எண்.29**

**<u>18-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ரா.சித்ரா ராஜ்குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மாணம்</u>**

எனது 18 வது வார்டின் கீழே உள்ள தெருக்களின் தேவை மற்றும் பணி விவரங்கள் பின்வருமாறு.

கண்ணன் மாவி மில் முதல் தெருவில் சாலை அமைத்தல் கால்வாய் கழிவுநீர் சீரமைத்தல் பாலம் தெருவின் கடைசியில் அமைத்தல்

கண்ணன் மாவி மில் இரண்டாவது தெருவில் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்தல்.

பாலசுப்பிரமணியம் தெருவில் சாலை அமைத்தல்

முனுசாமி தெருவில் சாலை தெருவிளக்கு மின்கம்பம் தண்ணீர் தொட்டி சீரமைத்தல்

மேட்டுத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் சாலையின் குறுக்கே மழைநீர் கால்வாய் அமைத்தல் கை பம்பை சின்டெக்ஸ் டேங்க் ஆக மாற்றியமைத்தல் குறுக்கு தெருவில் சாலை அமைத்தல்

பாரதி தெருவில் தெருவிளக்கு மற்றும் குப்பை தொட்டி அமைத்தல்

நரசிம்மன் தெருவில் சாலை மற்றும் மழைநீர் கால்வாய் சீரமைத்தல்

மேற்படி உள்ள பணிகளை தாங்கள் எனவே 18-வது வார்டு மக்களுக்காக சீர் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன் . புதிய சாலைகள் மற்றும் கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.30**

**<u>19-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.T.சரோஜா அவர்கள் கொண்டு வரும் தீர்மாணம்</u>**

ரத்தன் சந்த் நகரில் விளையாட்டு அரங்கம் மற்றும் மின்கம்பம் பழுது போய் உள்ளது இதை அகற்றி புதிய கம்பம் பொருத்தவும்.

ஜீவநாதம் தெருவில் புதிய ஆழ்துளை கிணறு உள்ளது மினி பவர் பம்பாக மாற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிலட்சுமி தெருவில் புதிய ஆழ்துளை கிணறு உள்ளது மினி பவர் பம்பாக மாற்றித்தரவேண்டும்.

பாலசுந்தரம் தெருவில் முருகன் தெரு சஞ்சீவி மேஸ்திரி தெரு (ம) சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் கல்வெட்டு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது ஆகவே அதை உடனடியாக கட்டித்தர வேண்டும். மழைக்காலம் வருவதற்கு முன்பு செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன் . பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

ஆதிலட்சுமி தெருவில் உள்ள நியாய விலை கடையில் குடும்ப அட்டைகள் அதிகமாக உள்ளதால் எங்களுக்கு 19–வார்டு பொதுமக்களுக்கு தனியாக நியாய விலை பிரித்துக் கொடுக்கவும்.

**பொருள் எண்.31**

**<u>20–வது நகரமன்ற உறுப்பினர் திருமதி.V.கோமதி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எங்கள் வார்டில் தினந்தோறும் அதிகமாக பயன்படுத்தக்கூடிய தெரு மங்கலங்கிழார் தெரு. சுமார் 15 ஆண்டு காலமாக சீர்மைக்காமல் உள்ளது. அந்த தெருவிற்கு புதிய சாலை அமைத்து தரவேண்டும்.

அன்னை கஸ்தூரிபாய் தெரு ( கருமாரி அம்மன் கோயில் பின்புறம் ) (குடிநீர் குழாய் இல்லாமல் உள்ளது. அந்த இணைப்பை சரி செய்து தரவேண்டும்.

கிரிசிங்நகர் 3வது தெரு மங்கலங்கிழார் தெரு கடைசி குறுக்கு தெரு மற்றும் கன்னியப்பன் தெருக்களில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றித் தரவேண்டும்.

கன்னியப்பன் தெருக்களில் உள்ள கால்வாய்களுக்கு இணைப்பு இல்லாமல் உள்ளது. இந்த இணைப்பை ( Outline) சரி செய்து தரவேண்டும்.

கிரிசிங்நகர் மங்கலங்கிழார் தெரு , கன்னியப்பன் தெருக்களில், அன்னை கஸ்தூரிபாய் தெரு ( ஆழ்துளை கிணறு) சின்டக்ஸ் டேங்க் அமைத்து தர வேண்டும்.

கன்னியப்பன் தெரு, திருவள்ளுவர் தெரு, மங்கலங்கிழார் கடைசி குறுக்கு தெருக்களில் சாலை நடுவிலும், கால்வாய் நடுவிலும், மின் கம்பம் அமைத்துள்ளது. அதை உடனடியாக சரி செய்து தரவேண்டும்.

20வது வார்டில் 15 மின்கம்பங்கள் சேதமடைந்துள்ளது. மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. உடனடியாக சரி செய்து தரவேண்டும்.

20வது வார்டில் மக்கள் நீண்ட நாட்கள் கோரிக்கை தெருக்களின் பெயர் பலகைகள் இல்லாமல் உள்ளது. பெயர் பலகைகள் அமைத்து தரவேண்டும்.

திருவள்ளுவர் தெருவில் அமைத்துடளள நெ.4 நகராட்சியின் கிணறு ( வற்றாத குடிநீர் கிணறு ) தூர் வாரி மக்களின் பயன்பாட்டிற்கு நிரந்தரமாக சரிசெய்து தரவேண்டும்.

வார்டு எண்.20க்கு நகராட்சியின் துப்புரவு பணியாளர்களை குறைத்தது 5 முதல் 10 நபர்களை நியமிக்க வேண்டும்.

புதியதாக அமைத்துள்ள மின் கம்பங்களுக்கு மின் விளக்கு பொருத்தி தரவேண்டும்.

கருமாரி அம்மன் கோயில் அருகில் பெரிய கால்வாய் ஒன்று உள்ளது. (மலேரியா கால்வாய் ) இந்த கால்வாய்க்கு கல்வெட்டு அமைத்து தரவேண்டும்.

**பொருள் எண்.32**

**<u>21–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.M.வடிவேல் வண்ணன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எனது வார்டில் லட்சிய அய்யனார் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிய மினி பவர் பம்பு பொருத்தி மற்றும் சின்டெக்ஸ் டேங்க் வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாக்கியம்மாள் காலனியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிய மினி பவர் பம்பு பொருத்தி மற்றும் சின்டெக்ஸ் டேங்க் வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

லட்சிய அய்யனார் மெயின் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிய மினி பவர் பம்பு பொருத்தி மற்றும் சின்டெக்ஸ் டேங்க் வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.33**

**<u>22–வது நகரமன்ற உறுப்பினர் திருமதி.S.மல்லிகா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

அன்னை இந்திரா நகர் உள்ள பொதுவழி சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது இவ்வழி சாலை அசோக் நகர் கைனூர் செல்லும் சாலை குண்டும். குழியுமாக உள்ளது. பொதுமக்கள் மிகவும் அவதிபடுகின்றனர் ஆகவே பொதுவழிசாலையை கான்கிரிட் ரோடு போட வேண்டுகிறேன்.

22 வார்டு உள்ள தெருக்களில் உள்ள கால்வாய்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது கழிவுநீர் தடையின்றி செல்ல தூர்வாரி சேதம் அடைந்துள்ள கீழ்மட்டத்தில் உள்ள கால்வாய்கள் உயர்த்தி புதியதாக அமைத்து தர வேண்டுகிறேன் (தெருக்கள் தர்மராயன் தெரு ஒத்தவாடை தெரு சீனிவாசன் தெரு. சோளிங்கர் ரோடு பின்புறம் உள்ள கால்வாய், PJN 1 மற்றும் 2வது தெருக்கள் உள்பட

தர்மராயன் தெரு, ஒத்தவாடை தெரு. சீனிவாசன் தெரு. சோளிங்கர் ரோடு , PJN 1 மற்றும் 2வது ஆகிய தெருக்களில் குடிநீர் தட்டுபாடு உள்ளது பொதுமக்களுக்கு புதியதாக குடிநீர் குழாய் அமைக்கவும் அல்லது போர்வெல் அமைக்கவும், பழைய குடிநீர் டேங்குகள் சரிசெய்து தருமாறு வேண்டுகிறேன்.

தர்மராயன் தெருவில் உள்ள பழைய ரைஸ் மில் எதிரில் குப்பை குழமாக உள்ளது. இந்த தெருவில் குப்பை தொட்டி இல்லாததால் , வேறு இடத்தில் உள்ள குப்பைகளை இங்கு வந்து கொட்டுகின்றனர். இதனால் இங்கு உள்ள மக்களுக்கு உடல்நலம் பாதிப்படைகின்றது. குப்பை தொட்டி வைத்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்

ரத்தன்சந்த் நகரில் நகராட்சி குப்பை எரிக்கும் இடம் உள்ளது. இங்கு உள்ள குப்பைகளினால் இங்கு உள்ள மக்களுக்கு உடல்நலம் பாதிப்படைகின்றது. இதை வேறு இடத்திற்கு மாற்றி தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் எண்.34**

**<u>23–வது நகரமன்ற உறுப்பினர் திரு.பா.நரசிம்மன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எனது 23 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

எனது 23ஆவது வார்டுக்கு உட்பட்ட அனைத்து தெருக்களின் பெயர் பலகை அமைத்து தர வேண்டும்.

மதியழகன் தெருவில் மினிபவர் பம்பு புதிதாக அமைத்து தர வேண்டும்.

ப உ சண்முகம் தெரு , ராணி அம்மாள் தெரு மற்றும் வார்டுக்கு உட்பட்ட அனைத்து கைப்பம்புகளையும் சரி செய்து தர வேண்டும்.

விண்டர் பேட்டை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மினி பவர் பம்ப் மோட்டரரை சரி செய்து தர வேண்டும்.

N V N தெருவில் கால்வாய் மற்றும் பாதாள சாக்கடை அமைத்து தர வேண்டும்

சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து தரப்பட இருக்கும் நியாய விலை கடைக்கு இடம் தேர்வு செய்து தரவேண்டும்.

ப உ சண்முகம் 3வது தெரு சாலை கால்வாய் புதிதாக அமைத்து தர வேண்டும்

23வது வார்டு உட்பட்ட பகுதியில் சுமார் 50 புதிய மின் விளக்குகள் அமைத்து தரவேண்டும் மற்றும் பழுதடைந்துள்ள அனைத்து மின் விளக்குகளை சரி செய்து தர வேண்டும்.

ப உ சண்முகம் 4வது தெருவில் கால்வாய் அல்லது பாதாள சாக்கடை அமைத்து தரவேண்டும்.

விண்டைர்பேட்டை பேருந்து நிலையத்தில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்து தர வேண்டும்.

எனது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதால் தண்ணீர் டேங்கில் தண்ணீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது வார்டில் அமைந்துள்ள எம்.எ.ஜெயின் நகராட்சி நடுநிலை பள்ளி மிகவும் பழமையான பள்ளி, இதில் 100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள், பயின்று வருகிறார்கள், இந்த பள்ளி கட்டிடம் கடந்த 30 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்ட பள்ளி, தேர்தல் நேரங்களில் (தேர்தல் பூத்தாகவும்) இரண்டு வார்டுகளுக்கும்(23,32) செயல்படும். எனவே இந்த பள்ளி மாணவர்களின் உயிர்க்கு அபாயம் ஏற்படும் வகையில் உள்ளது, எனவே குழந்தைகள், மாணவர்களின் நலம் கருத்தில் கொண்டு உடனடியாக புதிய பள்ளி கட்டிடம் அமைத்து தருமாறு பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

**பொருள் எண்.35**

**<u>24-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.மோகன்ராஜ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

A.B.M.சர்ச், ஒச்சேரி ரோடு ஓரத்தில் ஒரு புறமாக மழைநீர் செல்ல கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

A.B.M.சர்ச், 4வது குறுக்குதெரு, ஒச்சேரி ரோடு, 7வது குறுக்கு தெரு மற்றும் 7வது தெருவில் கைவிடப்பட்ட இடத்தில் பாதாள சாக்கடை பணி மேற்கொள்ள மேலும் அதனை தொடர்ந்து சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

7வது குறுக்கு தெருவில் மின்கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் இல்லாததால் 3 மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

A.B.M.சர்ச், 1வது, 2வது, 4வது மற்றும் 7வது தெருவில் ஆழ்துளை கிணறுகள் கூடிய கை பம்புகள் உள்ளன, கை பம்புகள் அகற்றி மின் மோட்டாருடன் கூடிய Sintex-டாங்குகள் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

10 வருடங்களுக்கு முன் கட்டி பயன்பாட்டில் இல்லாத எம் பகுதிக்கான நியாய விலைக்கடையை புதுப்பித்து, கூடியவிரைவில் பயன்பாட்டிற்க்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

4வது தெருவில் அமைந்தள்ள பொதுக்கழிப்பிட கட்டிம் 2 ஆண்டுகள் ஆகின்றது மேலும் அது பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதனை சீரமைத்து, புதுப்பித்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

4வது தெருவில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை ஒட்டியுள்ள காலி இடத்தில் சமுதாய கூடம் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

A.B.M.சர்ச், 2வது தெரு பின்புறமாக மழைநீர் சகதை தொடங்கி 5வது தெரு பின்புறமாக சென்று ஒற்றை கண் வாரபாதி இடத்தில் அமைந்துள்ள பெரிய கால்வாயில் பரந்து விரிந்து செல்கிறது. எனவே அதனை ஒழுங்கு படுத்தும் விதத்தில் ஆழமாக பெரிய கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

5வது குறுக்கு தெருவில் மழைநீர் செல்ல கால்வாய் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

A.B.M.சர்ச், ஒச்சேரி ரோட்டில் அமைந்துள்ள வாராபத்தியை JCB–யை வைத்து சீரமைத்து புதப்பித்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**பொருள் எண்.36**

**<u>25–வது நகரமன்ற உறுப்பினர் திரு.துரை சீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

அரக்கோணம் பழனிப்பேட்டை 25வது வார்டில் உள்ள கற்பகம் கடை எண். 2 (நியாய விலை கடை) கட்டிடம் பழுதடைந்துள்ளது. இதனால் எலி தொல்லைகள் அதிகம் இருப்பதால், பொதுமக்களுக்கு போய் சேர வேண்டிய உணவு பொருட்கள் வீணாகி வருகிறது. எனவே பொதுமக்கள் நன்மை கருதி உடனடியாக பழுதடைந்த ரேஷன் கட்டிடத்தை சரி செய்ய வேண்டும்.

அரக்கோணம் பழனிப்பேட்டை காந்தி ரோடு , பூக்கார நடராஜன் தெருவில் ஏற்கனவே கடந்த 2006–ம் ஆண்டு போட்ட சிமெண்ட் சாலை இதுவரை புதுப்பிக்கபடவில்லை. இந்த சாலை வழியாக நாள்தோறும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சென்று வருகின்றனர். எனவே இந்த தெருவில் உடனடியாக சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்க வேண்டும்.

அரக்கோணம் பழனிப்பேட்டை டில்லியப்பன் சந்து முதல் தெருவின் வழியாக ஏராளமான பொதுமக்கள் வழிப்பாட்டு தலங்களுக்கு சென்று வருகின்றனர். எனவே இந்த சிறிய சாலையை சீர்செய்து , சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்க வேண்டும்.

**பொருள் எண்.37**

**<u>26–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.N.சிட்டிபாபு அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

T N நகர் 7வது தெருவில் 2/3, 4 புதிய குடிநீர் பைப் லைன் பதித்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

T N நகர் 8வது தெருவில் உள்ள 1, 2, (ம) 3.வது குறுக்கு தெருக்களில் குடிநீர் குழாய்களை புது குழாய்களாக மாற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

T N நகர் 8வது தெருவில் பழுதடைந்துள்ள கல்வெட்டுகளை புதுப்பித்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

A N கண்டிகை 3வது தெரு (ம) A N கண்டிகை 5வது தெருவில் மழைநீர் கால்வாய்களை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.38**

**<u>27–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜெரி(எ)ஜெராட்தாமஸ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

சோமசுந்தரம் முதல் தெருவில் நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மூலம் செய்யவேண்டிய சிமெண்ட் சாலை பணியை முடித்து தர வேண்டுதல்

சோமசுந்தர முதல் தெருவில் இரண்டு மினி பவர் பம்பு அமைத்து தருதல்.

சோமசுந்தரம் நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு தக்கோலம் மற்றும் கேசாவரம் நீர் நிலையத்தில் இருந்து குடிநீர் விநியோக இணைப்பு செய்து தர வேண்டும்.

**பொருள் எண்.39**

**<u>28–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.S.ராஜ லட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

சத்தியவாணி முத்து நகர் 1–வது தெருவில் ஒரு டேங்க் மற்றும் கைபம்பு அமைத்திட வேண்டும் . சத்தியவாணி முத்து நகர் 3–வது தெருவில் ஒரு டேங்க் ஆழ்துளை குழாய் அமைத்தல். சோமசுந்தரம் 4–வது தெருவில் ஒரு டேங்கு அமைத்தல்.

சத்தியவாணி முத்து நகர் 3, 4–வது தெருவில் குடிநீர் குழாய்களை ஆழப்படுத்தி முறையாக குடிநீர் விநியோகம் செய்தல்.

சோமசுந்தர நகர் 2வது தெரு 3வது தெரு 4வது தெருக்கள், சத்தியவாணி முத்து நகர் 1, 2, 3, மற்றும் 4–வது தெருக்கள் அனைத்தும் கழிவு நீர் கால்வாய் சீரமைத்து பழுதடைந்தவை கட்டி தருதல்.

சோமசுந்தர நகர் 2வது தெரு 3வது தெரு 4வது தெருக்கள், சத்தியவாணி முத்து நகர் 1, 2, 3, மற்றும் 4–வது தெருக்களில் மின் விளக்குகள் சரிபார்த்திடுதல்.

சத்தியவாணி முத்து நகர் 1–வது தெருவில் 2 மின் கம்பங்கள், சத்தியவாணி முத்து நகர் 2–வது தெருவில் 2 மின் கம்பங்கள், சத்தியவாணி முத்து நகர் 3–வது தெருவில் 2 மின் கம்பங்கள், சத்தியவாணி முத்து நகர் 4–வது தெருவில் 2 மின் கம்பங்கள், சோமசுந்தர நகர் 2–வது தெருவில் 6 மின் கம்பங்கள், சோமசுந்தர நகர் 3–வது தெருவில் 2 மின் கம்பங்கள், சோமசுந்தர நகர் 4–வது தெருவில் 5 மின் கம்பங்கள் பழுதடைந்துள்ளதை மாற்றி அமைக்கவும், மேலும் சோமசுந்தர நகர் 3–வது தெருவில் டிரான்ஸ்பார்மர், பேஸ்கள், மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது அதனை மாற்றியமைக்க வேண்டும்.

சத்தியவாணிமுத்து 3வது தெரு கழிப்பிடம் பயன்பாடு இல்லாததால் அதனை இல்லம் தேடி கல்வி என்ற திட்டத்திற்கு பயன்படுத்த அனுமதி வேண்டுதல்

**பொருள் எண்.40**

**<u>29–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.நந்தாதேவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

புதிய மின் மோட்டருடன் கூடிய நீர் தேக்கத் தொட்டி அமைக்க கோருதல்

1. இலட்சுமணன் நகர் 2 வது தெரு
2. A.N கண்டிகை 2வது தெரு மற்றும்
3. திரு.வி.க தெரு ஆகிய மூன்று சாலைகளில் அமைத்து தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கவும் பழைய மழைநீர் வடிகால் கால்வாய்களை சீரமைத்து கல்வெட்டுகளை சீரமைக்கவும் கோருதல்.

1. A.N கண்டிகை 2வது தெருவில் குறுக்கே அமைந்துள்ள சிறிய சாலையில் மழை நீர் வடிகால் கால்வாய் அமைத்து தர வேண்டும்.
2. திரு.வி,க தெருவில் உள்ள பழதடைந்த மழைநீர் வடிகால்களை சீரமைத்து கல்வெட்டை சீரமைக்க கோருதல்
3. இலட்சுமணன் நகர் 2வது தெருவில் புதிய கல்வெட்டு அமைக்க கோருதல்
4. ஒத்தவடை தெருவில் அமைந்துள்ள கல்வெட்டை புதுபிக்க கோருதல்.

**பொருள் எண்.41**

**<u>30–வது நகரமன்ற உறுப்பினர் திரு.S.பிரகாஷ்அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

வார்டு எண். 30க்கு உட்பட்ட காந்திரோடு பகுதியில் உள்ள சாலையின் இருபுறமும். நடைமேடையுடன் கூடிய மழைநீர் கால்வாய் அங்காளம்மன் கோயிலில் இருந்து பிள்ளையார் கோயில் வரை அமைத்துத்தருமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சாணாத்தியம்மன் கோயில் பின்புறம் உள்ள பகுதியில் இருந்து பிள்ளையார் கோயில் பின்புறம் உள்ள பகுதி வரை சாலை அமைத்து அதற்கு தகுந்த பெயர் வைத்து தரும்படி வேண்டுகிறேன்.

V.P. கோயில் சந்து தெருவிற்கு கான்கிரீட் சாலை அமைக்க கோருதல்

கற்பகம் கூட்டுறவு அங்காடி செல்வதற்காக தனி தரமான சாலை அமைத்துதரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிள்ளையார் கோயில் பின்புறம் உள்ள பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குடிநீர் பைப்லைன் அமைத்து தருதல் வேண்டும்.

மழைநீர் கால்வாய் தூர்வாருதல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

சாணாத்தியம்பன் கோயில் ஒட்டியுள்ள இடத்திலிருந்து குருசாமி தெரு கடைசி வரை உள்ள கால்வாய் தூர் வாரி அதன் குப்பைகளை அகற்றித்தரும்படி வேண்டுகிறேன்.

குருசாமி தெரு கடைசியில் உள்ள பெரிய கால்வாய் பகுதியை ஆக்கிரமித்து கட்டியுள்ள வீட்டை அகற்றி குருசாமி தெருவில் இருந்து கற்பகம் கூட்டுறவு அங்காடி வரை தூர் வாரி அதை அப்புறப்படுத்துதல்.

பிள்ளையார் கோயில் பின்பகுதியில் கழிவுநீர் கால்வாய் இல்லாத இடத்தில் புதிய கழிவுநீர் கால்வாய் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் கால்வாய் உயர்த்தி கட்டித் தருதல் வேண்டும்.

குருசாமி தெருவில் உள்ள கால்வாய் சீரமைத்து தருதல் வேண்டும்.

V.P. கோயில் சந்தில் உள்ள தேவி தியேட்டர் செல்லும் வழியில் இருபறமும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருதல் வேண்டும்.

குருசாமி தெரு, V.P.கோயில் தெரு, கேப்ரியல் பள்ளி எதிரில் (ம) V.P கோயில் சந்து தெருவில் உள்ள இரண்டு கல்வெட்டு மொத்தம் 5 பழைய கல்வெட்டுகளை அகற்றி புதிய கல்வெட்டுகளை அமைத்து தரும்படி வேண்டுகிறேன்.

குருசாமி கடைசி தெருவில் உள்ள கைபம்பினை அகற்றி மினி பவர் பம்பு பொருத்தி நீர்தேக்க தொட்டி அமைக்கவும்.

காந்திரோடு பகுதியில் உள்ள கைபம்பினை அகற்றி மினி பவர் பம்பு பொருத்தி நீர்தேக்க தொட்டி அமைக்கவும்.

காந்திரோடு பகுதியில் உள்ள ஒரு மின்கம்பம் கால்வாய் நடுவில் அமைந்துள்ளது. அதை கால்வாய்க்கு வெளிப்பகுதியில் மாற்றி அமைக்க வேண்டுகிறேன்.

வார்டு எண். 30க்கு உட்பட்ட தெருக்களில் தெருவிளக்கு கம்பங்களில் பழமையான விளக்குகளானTube light fittings– அகற்றி புதிய LED தெரு விளக்குகள் பொருத்தி பராமரிக்கவும்.

வார்டு எண். 30க்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும் தெருவிற்கு 20 தெரு நாய்கள் வீதம் சுற்றி திரிகிறது. இந்த நாய்கள் குழந்தைகள் மற்றும் வாகனத்தில் செல்பவர்களை துரத்தி கடிக்க முற்படுகின்றன. இதனை சரிசெய்ய நாய்களை பிடிக்க உரிய ஆவன செய்யுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.42**

**<u>31–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.லட்சுமி கண்ணதாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எங்கள் பகுதியான 31வது வார்டில் புதுப்பேட்டை 3–வது தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளது . பாதாள சாக்கடை பணி நிறைவடைந்தும் அந்த சாலை சீர் செய்யவில்லை.

புதுப்பேட்டை 3–வது தெருவில் உள்ள கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது . ஆகவே அந்த கால்வாய் மற்றும் கல்வெட்டு புதிதாகக் கட்டி தருமாறு வேண்டும்

புதுப்பேட்டை மூன்றாவது தெருவில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சின்டெக்ஸ் டேங்க்காக அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.43**

**<u>32–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.L.ஜெயப்பால் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எனது பகுதி அம்மன் கோயில் தெரு, மசூதி தெரு ,காயிதே மில்லத்தெரு, ஜெகஜீவன்ராம் தெருக்கலுக்கு குடிதண்ணிர் சரியாக செல்வதில்லை இத்தெருக்களின் குடிநீர் பைப்லைன் மாற்றி தரவேண்டும்.

E.B ரோட் NVN 2வது தெருக்களின் மழைநீர் செல்ல கல்வெட் அமைக்க வேண்டும்.

எனது பகுதி 19 தெருக்களை கொண்டது இத்தெருக்களின் தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு 1. அம்மன் கோயில் தெரு 2. ஜெகஜீவன்ராம் 3.திருவள்ளுவர் தெரு 4. மசூதி தெரு 5, NVN முதல் தெருக்களுக்கு மின்மோட்டாருடன் கூடிய போர் மினி பவர் பம்ப்பவுஸ் அமைத்து தரவேண்டும்.

பாதள சாக்கடை பணிகள் நடைப்பெற்றதால் விடுப்பட்ட பல தெருக்களின் சாலைகள் மிகவும் பழதடைந்துள்ளது. இத்தெருக்களுக்கு சாலை அமைத்து தரவேண்டும் NVN முதல் தெரு, அம்மன் கோயில் தெரு, திருவள்ளுவர் தெரு, கம்பன் தெரு, E.B ரோட்

பல தெருக்களுக்கு பாதள சாக்கடை பணிகள் விடுபட்டுள்ளது 1.ஏம்.ஏ.ஜெயின் பள்ளிதெரு (மதியழகன் 2வது) கக்கன் 1வது தெரு 2வது தெரு , காயிதே மில்லத்தெரு, இத்தெருக்களுக்கு பாதள சாக்கடை இணைப்பு வழங்க வேண்டும்

பொது மக்களுக்கு இடைஞ்சலாக உள்ள மசூதி பின்புறம் அமைக்கப்பட்டுள்ள டிரான்ஸ் பார்மர் வேறு இடம் மாற்றிக் கொடுக்க வேண்டும்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் பயனில் உள்ள பழதடைந்த மின் கம்பங்களை மாற்ற வேண்டும்.

விண்டர்பேட்டையில் நீர் ஏற்றும் ஒக்கேனக்கல் கூட்டு குடிநீர் வழங்கும் மின்மோட்டார் 7½ H.P யாக உள்ளது. இந்த மின்மோட்டார் வழியாக 2 லட்சம் தண்ணிர் ஏற்ற 7மணி நேரம் செலவாகின்றது. எனவே பொது மக்களுக்கு விரைவாக குடிதண்ணிர் வழங்க முடியவில்லை எனவே 15 H.P (அ) 20 H.P மின்மோட்டர் பொருத்த வேண்டும்.

**பொருள் எண்.44**

**<u>33–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பரக்கத் சகாப்தின் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

அரக்கோணம் நகரம் 33 வது வார்டு சார்பாக கடும் வெயிலின் காரணமாக போர்காள அடிப்படை உடனடியாக செய்ய வேண்டிய பணிகள்.

1. சரிவர வராமல் உள்ள குடிநீர் வினியோகம் ஆகவே மெயின் லைன் பைப் சரிப்பார்த்து தர வேண்டும்.
2. ஏற்கனவே உள்ள ஆழ்த்துளை போர்வல் கை பம்பு சரிவர செயல் படாததால் மாற்றம் செய்து பவர் பப்பு அமைத்து தர வேண்டும். இரண்டு இடங்களில்
    a. கிருஷ்ணாம் பேட்டை 3வது தெரு
    b. முபாரக் நகர்
    c. கிருஷ்ணாம் பேட்டை 5வது தெரு

மற்றும் அனைத்து பணிகளும் சரிவர செய்து தருமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

**பொருள் எண்.45**

**<u>34–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஆ.ரஸியா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

முத்தப்பன் தெரு அருந்ததி பாளையத்தில் விடுப்பட்ட பாதாளசாக்கடை திட்டம் அமைத்து, புதிய சாலை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பஜனைக் கோவில் தெரு கடைசியில் இரண்டுப்பக்கமும் பின்புறம் கால்வாய்கள் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காந்தி ரோடில் கால்வாய் அமைத்து, அதன்மேல் நடைமேடை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

34–வது வார்டில், மூன்று (3) ஆழ்துளை கிணறு அமைத்து அதில் மின்மோட்டார் மற்றும், (sintex tank ) வாட்டர் டேங்க் அமைத்து தருமாறுக் கேட்டுக்கொள்கிறேன்.

34–வது வார்டில் உள்ள தெருக்களில் மின் விளக்கு நவின முறையில் மாற்றி அமைத்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் எண்.46**

**35–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.V.காந்திராஜ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

முனுசாமி பிள்ளை தெருவிற்கு தரமான சாலை வசதி செய்து தர கோருதல்.

முனுசாமி பிள்ளை தெருவிற்கு Syntex Tank அமைத்து மின் மோட்டார் குழாய் (Power Pump House) அமைத்து தர கோருதல்

முனுசாமி பிள்ளை தெருவில் சோலார் மின் விளக்குகள் அமைத்து தர கோருதல்.

நகராட்சிக்கு உட்பட்ட குளத்துக்கரை பகுதியில் தரமானசாலை வசதி செய்து தர கோருதல். அதே தெருவில்இரண்டு Syntex Tank அமைத்து மின் மோட்டார் (PowerPump House) அமைத்து குடிநீர் வசதி செய்து தருமாறு கோருதல்.

குளக்கரை தெருவில் சோலார் மின் விளக்கு மற்றும் குடிநீர் பைப்லைன் அமைத்து தருதல்.

முனுசாமி பிள்ளை தெரு, கிருஷ்ணாம்பேட்டை முதல் தெரு, கிருஷ்ணாம்பேட்டை இரண்டாவது தெரு, தெருக் கல்வெட்டுகள் மாற்றி அமைத்து தருமாறு கோருதல்.

கிருஷ்ணாம்பேட்டை இரண்டாவது தெருவில், பள்ளி வாசல் மற்றும் பெண்கள் பயிலும் மேல்நிலைப்பள்ளி இருப்பதால் அவர்களின் பாதுகாப்பு நலன் கருதி CCTV கேமரா அமைத்து தருமாறு கோருதல்.

முனுசாமி பிள்ளை தெருவில் நகராட்சி பள்ளி,அங்கன்வாடி மையம் மற்றும் S.R.கேட் பேருந்துநிறுத்தம் இருப்பதால் அங்கு தரமான CCTV கேமராஅமைத்து தருமாறு கோருதல்.

ஓச்சேரி ரோடு பகுதி மக்கள் குப்பைகள் கொட்டகுப்பைத் தொட்டி இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.எனவே அந்த பகுதியில் இரண்டு குப்பைத் தொட்டிகள்அமைத்து தர வேண்டுகிறேன்.

நகராட்சியின் முக்கியப் பகுதி என்பதால், மக்கள்அதிகமாக வசிப்பதால் S.R.கேட் பகுதியில் E–சேவை மையம் கொண்டுவர வேண்டுகிறேன்.

கிருஷ்ணாம்பேட்டை 7வது தெரு, போர்டிங் தெரு முனையில் பொதுமக்களுக்கும். போக்குவரத்திற்கும் இடைஞ்சலாக உள்ள டிரான்ஸ்பார்மரை வேறு இடத்திற்கு மாற்றி தர கோருதல்.

**பொருள் எண்.47**

**36–வது நகரமன்ற உறுப்பினர் திரு.A.முனீஸ்வரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

நான் 36வது வார்டு அரக்கோணம் நகர மன்ற உறுப்பினர் ஆவேன், எனது 36 வார்டில் மக்களின் பயன்பாட்டிற்கு தேவையான கான்கிரீட் சாலை, தண்ணீர் பற்றக்குறையை போக்க ஆழதுளை கிணறு (போர்பெல்) பிளாஸ்டிக் 1000 Ltr(N) 5000 Ltr Tank கொள்ளவுடன் கூடிய மின் மோட்டார் ஆகியவை கீழ்காணும் விவரங்கள் தரப்பட்டுள்ளது.

கான்கிரீட் சாலை செய்யூர் பாட்டை

கான்கிரீட் சாலை சிதம்பர நகர் 1 முதல் 6 வரை

கான்கிரீட் சாலை மலையப்பன் தெரு 1 முதல் 3 வரை

கான்கிரீட் சாலை மலையப்பன் குறுக்கு தெரு

காஜா நகர் ஆழ்துளை கிணறு மின்மோட்டாருடன் கூடிய Sintex Tank (4) கான்கீரிட் சாலை

செய்யூர் பாட்டை ஆழ்துளை கிணறு மின்மோட்டாருடன் கூடிய Sintex Tank மலையப்பன் தெரு ஆழ்துளை கிணறு மின்மோட்டாருடன் கூடிய Sintex Tank

மலையப்பன் தெரு ஆழ்துளை கிணறு மின்மோட்டாருடன் கூடிய Sintex Tank

எனவே மேற்காணும் விபவரங்களின் படி மக்களின் பயன்பாட்டிற்கு கான்கிரீட் சாலைகளும், ஆழ்துளை கிணறு மின்மோட்டார் கூடிய Sintex Tank மற்றும் கால்வாய் இணைப்பு (கல்வெட்டி) சிதம்பர நகர் 1வது தெரு (சாய்நகர்) 2வது தெரு, செய்யூர் பாட்யில் 3 Nos மலையப்பன் 1வது தெரு. மற்றும் பழைய போர்வெல்கள் பழுது பார்த்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**(திருமதி.லட்சுமி பாரி)**
**நகரமன்ற தலைவர்**
**அரக்கோணம் நகராட்சி**